நாள்.14.08.2024

**அசல் வழக்கு எண். 26/2022**

பி.வா.சா.1- வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது வீட்டிற்கு தென்புறத்தில் ரோடு உள்ளது. ரோட்டிற்கு எந்த பக்கத்தில் வடிகால் உள்ளது என்றால் எந்த பக்கத்திலும் இல்லை. பொதுவாக ரோட்டில் மழைநீர் வடிவதற்காக வடிகால் உண்டு. எனது வீட்டிற்கு மேல்புறம் யாருக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் வெங்கடாச்சலம் இடம் உள்ளது. அதற்கு தென்புறம் ரோடு உள்ளது. அந்த ரோட்டிற்கு இருபுறமும் வடிகால் இல்லை. அந்த இடம் பட்டா இடம். அது ஆவுடையப்பனுக்கு சொந்தமான இடம். வெங்கடாச்சலம் இடத்திற்கு மேல்புறம் யார் இடம் என்றால் எனது இடம் உள்ளது. எனது இடத்திற்கு தென்புறம் ரோடு உள்ளது. ஆனால் வடிகால் கால்வாய் இல்லை. மேற்படி இடத்திலுள்ள வடிகால் கால்வாயை நான் வெட்டியதால் தான் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அங்கு வடிகால் கால்வாய் இல்லை. எனது தோப்பிற்கு உண்டான சர்வே எண்.63/1 டி. அதற்கு தென்புறம் உள்ள ரோடு யாருக்கு சொந்தமான என்றால் ஐயருக்கு சொந்தமான இடம். மேற்படி ரோடு எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 40 வருடங்களாக உள்ளது. வெங்கடாச்சலம் இடத்திற்கு தென்புறம் ரோடு உள்ளது. அது யாருக்கு சொந்தமானது என்றால் ஐயருக்கு சொந்தமானது. வெங்கடாச்சலம் இடத்திற்கு தென்புறம் ரோடு உள்ளது. அதற்கு தென்புறம் யாருக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் ஐயருக்கு சொந்தமான இடம். ஆனால் யார் வாங்கியுள்ளார் என்று தெரியாது. என் வீட்டிற்கு தென்புறம் மட்டும் தான் ஆவுடையப்பனுக்கு சொந்தமான வீடு, மனைக்கட்டுகள் உள்ளது. ஆவுடையப்பன் இடத்திற்கு மேல்புறத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் ரோடு, வடக்கு நோக்கி சென்று பின் கிழக்கு நோக்கி சென்று, அதிராம்பட்டிணம்- மன்னார்குடி சாலையில் இணைந்துவிடுகிறது. மேற்படி சாலை இணையும் இடத்தில் தான் பாலம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய வீட்டிற்கும், ஆவுடையப்பன் வீட்டிற்கும் இடையில் உள்ள ரோடு உட்பிரிவு செய்யப்படவில்லை. கோடிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் தான் வடிகால் வாய்க்காலை எடுத்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த இடத்தில் வடிகால் இல்லை. நான்

என் வீட்டிற்கு அருகில் உள்ள வடிகால் வாய்க்காலை தூர்த்து என் இடத்துடன் சேர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் வடிகாலை தூர்த்து விட்டதால் தண்ணீர் செல்ல முடியாமல் வாதிகள் இடத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது என்றால் சரியல்ல. வடிகால் காலை மீண்டும் வைத்துக் கொடுக்க வேண்டுமென வாதிகள் கேட்கிறார்கள் என்றால் வடிகால் வாய்க்காலே இல்லை. அதனால் வடிகால் வாய்க்கால் வைத்துக் கொடுக்க முடியாது. நான் தற்பொழுது வடிகால் வாய்க்கால் இல்லை என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நான் வடிகால் வாய்க்காலை வைத்துக் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கொடுத்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran, B.A., B.L.,
District Munsif, Pattukkottai.